முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 294/2015

நாள். 16.02.2026 பி.வா.சா.1 – திரு.முருகன்

த/பெ - திரு.வேல் கோனார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

14, 19 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) உங்கள் தகப்பனார் பெயர் வேலுக் கோனார் என்றால் சரி தான். உங்கள் தகப்பனாருக்கு நீங்கள், ஆறுமுகத்தம்மாள் என்ற மகளும், கோமதி என்ற ஒரு மற்றொரு மூத்த மகளும் சந்ததிகள் என்றால் சரி தான். இவர்கள் தவிர கிருஷ்ணன் அவர் இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி என்றால் சரி தான். நான் இந்த வழக்கில் 4 ம் பிரதிவாதி ஆவேன். இந்த வழக்கில் உங்கள் சகோதரிகளான ஆறுமுகத்தம்மாள், கோமதி ஆகியோர்களை தரப்பாக சேர்க்கவில்லை என்றால் சரி தான்.

2) உங்கள் தகப்பனார் வேலுக்கோனார் உங்களது சகோதரி கோமதிக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார் என்றால் சரி தான். அதே போல் உங்களுக்கும் உங்கள் தகப்பனார் பி.வா.சா.ஆ.2 மூலம் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் என்றால் சரி தான். உங்களுக்கும், உங்கள் சகோதரி கோமதிக்கும் ஒரே நாளில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.16 15:05:27 +0530

3) எங்கள் குடும்பங்களில் உள்ள 4 நபர்களுக்கும் ஒரே நாளில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. உங்கள் சகோதரி கோமதிக்கு எழுதிக் கொடுத்துள்ள ஆவணத்தில் நீங்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் சரி தான். அதே போல் மற்ற செட்டில்மெண்ட் ஆவணத்திலும் மற்ற சகோதர சகோதரிகள் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாக சாட்சி கூறுகிறார்.

4) உங்கள் சகோதரிக்கு உங்கள் தகப்பனார் எழுதிக் கொடுத்த 07.03.2007 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள முதல் சாட்சியின் கையொப்பம் உங்களுடையது தான் என்றால் சரி தான். 2வது சாட்சி கிருஷ்ணன் என குறிப்பிட்டுள்ளது எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். 07.03.2007 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் **பி.வா.சா.ஆ. 5** ஆகும்.

5) உங்கள் தகப்பனாரின் தகப்பனார் பெயர் ஒளிமுத்து என்றால் சரி தான். அவர் என்னுடைய தாத்தா ஆவார். ஒளிமுத்து உடன் மாசாணம் என்ற உடன் பிறந்த சகோதரர் உண்டு என்றால் சரி தான். மற்றொரு சகோதரர் சுடலைமுத்துவும் உண்டு என்றுசாட்சி கூறுகிறார். மேற்படி சுடலைமுத்து, ஒளிமுத்து, மாசாணம் மேற்படி 3 நபர்களின் தகப்பனார் பெயர் மாசாணம் என்றால் சரி தான். உங்கள் தாத்தாவின் அப்பா மாசாணத்தின் உடன் பிறந்த சகோதரர் யார் என்றால் எம்பெருமாள் கோனார் ஆகும்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.16 15:05:32 +0530

6) எம்பெருமாள் கோனாருக்கு ஒளிமுத்து, இசக்கிமுத்து ஆகிய 2 மகன்கள் என்றால் சரி தான். அவர்கள் தற்போது இறந்து விட்டார்கள். இசக்கி முத்துவின் மனைவி பெயர் சிவகாமி என்றால் சரி தான். இசக்கிமுத்து மற்றும் சிவகாமிக்கு மாசாணம் என்ற ஒரு மகன் உண்டு என்றால் சரி தான். சிவகாமி அவரது மகன் மாசாணம் மைனர் ஆக இருக்கும் போது 06.02.1943 ல் உங்கள் தாத்தா ஒளிமுத்து அவரது தம்பி மாசாணம் ஆகிய இருவருக்கும் சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரி தான்.

7) ஒளிமுத்துவின் மகன் வழி பேத்தியான உங்கள் சகோதரி கோமதிக்கும் பி.வா.சா.ஆ.5 மூலம் செட்டில்மெண்ட் கிடைத்த பிறகு உங்கள் சகோதரி கோமதி 12.03.2012 ல் 5 ம் பிரதிவாதி அருஞ்சுனை என்பவருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரி தான். கிரைய ஆவணத்தின் படி 5 ம் பிரதிவாதி அருஞ்சுனை சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரி தான். 5 ம் பிரதிவாதி அருஞ்சுனை காலமாகி விட்டார் என்றால் சரி தான்.

8) அருஞ்சுனையின் மகள் பெயர் மகேஸ்வரி என்றால் சரி தான், அவர் வழக்கில் 19 ம் பிரதிவாதி ஆவார். அருஞ்சுனை தனது மகளான 19 ம் பிரதிவாதி மகேஸ்வரிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். உங்கள் தகப்பனார் உங்களக்கு எழுதிக் கொடுத்த பி.வா.சா.ஆ.2 சொத்தின் கீழ்புறம் உங்கள் சகோதரி கோமதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். அந்த சொத்தை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.16 15:05:40 +0530

தான் 5ம் பிரதிவாதியின் மகள் மகேஸ்வரி 19ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் 19ம் பிரதிவாதி மகேஸ்வரி என்னுடைய மகன் வெங்கடேசுக்கு இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போதே எழுதிக் கொடுத்து விட்டார். வழக்கு தபசில் சொத்து எந்த காலத்திலம் வழக்கு வாதியின் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரி தான்.

8ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

8ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.16 15:05:45 +0530